# ஆய்வுச் சிந்தனைகள்

வரிசை 13 தொகுதி 1

பதிப்பாசிரியர்கள்

**வீரா.அழகிரிசாமி**

**சு.கண்ணன்**

ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம்

2014

## நூல் செய்தி

| | |
|---|---|
| நூல் தலைப்பு | ஆய்வுச்சிந்தனைகள் (Aaivu Chinthanaigal) வரிசை 13 தொகுதி – 1 |
| பொருள் | செவ்வியல், சமயம், மொழியியல், பிற |
| பதிப்பாசிரியர்கள் | வீரா.அழகிரிசாமி, சு.கண்ணன் |
| பதிப்பாலோசனைக்குழு | க.நாகநந்தினி, ஆ.பாப்பா |
| மொழி | தமிழ் |
| அளவு | 1 X 8 வெம்மி |
| எழுத்து | 11 புள்ளி |
| தாள் | மேப்லித்தோ |
| பதிப்பு | முதல் பதிப்பு 24–05–2014 |
| படிகள் | 150 |
| உரிமை | கட்டுரையாளர்கள் |
| **ISBN** | **978-81-923792-8-9** |
| விலை | விற்பனைக்கல்ல (பேராளர்கட்கு மட்டும்) |
| நிகழிடம் | கொங்குநாடு கலைஅறிவியல் கல்லூரி, கோவை. |
| வெளியீடு | ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரை. மற்றும் செப்சிரா, 24, பழைய அக்ரஹாரம், சின்னச்சொக்கிகுளம், மதுரை 625 002. |
| அச்சீடு | ஜோசப் பிரிண்டர்ஸ் 61 மெயின்ரோடு, பரவை, மதுரை. செல் : 99946–61194 |
| அட்டை | வீரா.அழகிரிசாமி |

இந்நூலில் இடம்பெறும் கட்டுரைக்கருத்து அந்தந்தக் கட்டுரையாளர்களுடையது.

39. ஔவையின் உயிர்ப்புச் சூழலியல் சிந்தனை - சு. பூங்கொடி 190

40. பண்பாட்டியல் நோக்கில் உலகப் பொதுமறையும் குறிஞ்சிப்பாட்டும் - மு.நாகராஜன் 196

41. "கீழ்க்கணக்கு அகநூற்பனுவல்களில் மருதத் திணைச் சார்ந்தப்பதிவுகள்" - மு.ஐயப்பன் 201

42. ஔவையார் புறப்பாடல்களில் பெண்நிலைப் பதிவுகள் - சிந்து.மூ 205

43. புறநானூற்றில் வானவியல் - மா.சிலம்பரசன் 210

44. சங்கப் பெண் புலவர்களும் சூழலியல் பெண்ணியமும் - அனுராதா 215

45. திருவிருத்தத்தில் சங்க இலக்கியத்தாக்கம் - ரா.மகேஸ்வரி 220

46. பதினெண் கீழ்க்கணக்கில் மானிடவியல் பதிவுகள் - த.கருப்பையா 225

47. சைவத் திருமுறைகளில் அருள் - ப.சி.குருசண்முகாம்பாள் 231

48. அற்புதத்தின் அற்புதம் காரைக்காலம்மையார் - பெ.கிருஷ்ணவேணி 236

49. வைணவமும் சீக்கியமும் - ஒற்றுமைகளும் வேறுபாடுகளும் - சோ.கி.கல்யாணி 239

50. மூவர் தேவாரத்தில் மூவகைக் கற்பனைகள் - சு.சதீஷ்குமார் 244

51. நம்மாழ்வாரும் இராமலிங்க அடிகளாரும் - ஜெ.செல்வம் 249

52. சண்டேசுவரர் - ஓர் பார்வை - கிளி மொழி 254

53. சிலம்பில் சமண ஏற்பும் - பௌத்த மறுப்பும் - க.முருகேசன் 258

54. எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் உரைத்திறன் - க.பழனிவேல் 263

55. பரணர் பாடல்களில் இயற்கை - த.பூங்கோதை 268

56. சிலம்பில் எண் 'மூன்று' பெறும் சிறப்பு - வி.சுகந்தா 273

57. கருவூர்ப்புராணத்தில் கருவூர்த்தேவர் - ச.பத்மினி 278

58. திணைமொழி ஐம்பதில் ஐந்நிலப்பின்னணி - இரா.மணிமேகலை 283

59. உமர்கய்யாம் பாடல்களில் உடல் தத்துவம் - மா.கருணாகரன் 288

# 53

# சிலம்பில் சமண ஏற்பும் - பௌத்த மறுப்பும்

சிலப்பதிகாரம், தமிழின் முதல் தொடர்நிலைச் செய்யுள், மூத்த தனிப்பெரும் காப்பியம், முத்தமிழின் வித்தான இலக்கியம் ; பெண்மையைப் போற்றும் உண்மைக்காவியம், தமிழர்தம் மானுடவியலின் மகத்துவம் ; அவர்தம் சமூகவியலின் உயர் நனிச்சாரம். பண்டைய வரலாற்றின் வரைவுகோள். உலகப் பெருங் காப்பியங்களோடு ஒப்பத்தக்க உட்கூறுகளை தன்னகத்தே உள்ளடக்கிய இலக்கிய வகைகளின் தனிப்பெரும் தொகுப்பு என முன்மொழியப்பட்டு தொன்மைக் கதையின் உண்மை வெளிப்பாடு, மூவேந்தர்களின் வாழ்வியல் வகைப்பாடு, சமணம் பேசும் சமயக்கோட்பாடு, என்று சிலப்பதிகாரம் வழிமொழியப்படுகிறது. அரசியல் நெறியில் தவறிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், பத்தினியை உயர்ந்தோர் போற்றுவதும், ஊழ்வினை தொடர்ந்து வந்து பயனளித்தே தீர்வதும் என்னும் அறக்கருத்துக்களின் விதைகளை சமண விருட்சங்களாக இம்மண்ணில் விளைவித்தது சிலம்பு எனலாம். சுருங்கக் கூறின் காலில் கிடந்து கையில் எழுந்து செங்கோலில் நின்று கோயில் கொண்டது சிலம்பு எனப் பகரலாம். சிலம்பு பேசிய சமணமத ஏற்புரைகளையும், பேசி மறுத்த பௌத்த மத மறுப்புரைகளையும் திறனாய்வியல் நோக்கில் வெளிப்படுத்த இவ்வாய்வு முனைந்துள்ளது.

### சமண பௌத்தக் கோட்பாடுகள்

வேதகாலத்தில் தொழில் அடிப்படையில் ஏற்பட்ட நால்வகை வருணப் பிரிவினையானது நாளடைவில் சுரண்டலையும், மேலாதிக் கத்தையும், வம்ச பரம்பரையை உறுதி செய்து கொள்வதற்காக, பிறப்பின் அடிப்படையிலான பிரிவினையாக மாறியது. வேத காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் சமுதாய நிலைமையிலும் பல மாற்றங்கள் ஏற்படலாயின. விவசாயமே மக்களது பிரதானமான தொழிலாகவும், கிராமங்களே முதன்மையான உற்பத்தி நடவடிக்கை களுக்கான கேந்திரங்களாகவும் இருந்த வேளையில், கலைகளும் கைவினைத் தொழில்களும் துரிதமாக முன்னேற்றம் அடையலாயின. இந்த வர்த்தக முறையானது வாணிபம் வளர வழி வகுத்துக் கொடுத்தது. இந்தப் பொருளாதார மாற்றங்கள் வாணிபத்துவ வளர்ச்சிக்கு வழி வகுத்ததோடு அரசியல் அமைப்பிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. பழைய குலக்குடி அமைப்புக்கள் சிதைந்து, நாடு ஏதேச்சாதிகாரமான அரசர்களால் நிர்வகிக்கப்பட்டு சிறுசிறு ஆட்சிப்பகுதிகளாக பிளவுபடுத்தப்பட்டது. தேசப் பொருளாதாரத்துக்குக் குந்தகம் விளைவித்து வந்த பிராமணிய

*க.முருகேசன், தமிழ்த்துறைத்தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 029.*